விவசாய சங்க மாநாட்டு தீர்மானங்கள்

★

[அகில இந்திய விவசாயிகள் சங்க மாநாடு, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநாடு, தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிர்வாக சபை ஆகியவைகளில் நிறைவேற்றிய தீர்மானங்கள்.]

★

N
97395

...டு விவசாயிகள் சங்கம்
சென்னை 1.

[விலை 0-20 ந.பை

முன்னுரை

இச்சிறு பிரசுரத்தில் திருச்சூர் அகில இந்திய விவசாயிகள் சங்க மகாநாட்டில் நிறைவேற்றப் பட்ட முக்கியமான தீர்மானங்களும், சிதம்பரம் மாகாண விவசாயிகள் மகாநாட்டின் முக்கியமான தீர்மானங்களும், கடலூரில் கடைசியாகக் கூடிய தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிர்வாகக் கமிட்டி நிறைவேற்றிய உச்சவரம்பு கட்டும் மசோதா பற்றிய தீர்மானமும் வெளியிடப்பட்டுள்ளன. இத் தீர்மானங்கள் நிலச்சீர்திருத்தம்பற்றியும், விவ்சாயிகள்பால் சர்க்கார் அனுஷ்டிக்கும் இதர முக்கியமான கொள்கைகள்பற்றியும் அகில இந்திய சங்கத்தின் கொள்கைகளைத் தெளிவுபடுத்துவன. தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் உச்சவரம்பு சட்டத்தைத் திருத்துவதற்கான மிகப் பெரிய கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் இந்தச் சமயத்தில் இத் தீர்மானங்களை எல்லா விவசாய சங்க ஊழியர்களும், விவசாயப் பெருங்குடி மக்களும் தெளிவாகப் படித்துப் புரிந்துகொள்ள வேண்டும். சகலரும் இப் பிரசுரத்தை வாங்கி ஊக்குவிக்கும்படிக் கோருகிறேன்.

மணலி சி. கந்தசாமி
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்.

சிதம்பரத்தில் நடைபெற்ற தமிழ்நாடு விவசாயிகள் சங்க மகாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக கமிட்டி உறுப்பினர்கள் :—

நிர்வாகஸ்தர்கள்

1.	பி. சீனிவாசராவ்	— தலைவர்
2.	ஏ. கே. சுப்பையா	— உபதலைவர்
3.	மணலி சி. கந்தசாமி	— பொதுச் செயலாளர்
4.	கே. ஆர். ஜி. சம்பந்தம்	— கூட்டுச் செயலாளர்கள்
5.	ஆர். ராமராஜ்	

உறுப்பினர்கள்

6.	தோழர்	எஸ். வடிவேலு	தஞ்சை மாவட்டம்.
7.	,,	எம். காத்தமுத்து	
8.	,,	பி. சிவகுருநாத பிள்ளை	
9.	,,	கே. ரெங்கசாமி	திருச்சி மாவட்டம்.
10.	,,	கருப்பையா	
11.	,,	எஸ். ஆதிமூலம்	இராமநாதபுரம் மாவட்டம்.
12.	,,	எஸ். அழகிரிசாமி	
13.	,,	எல். சண்முகம்	
14.	,,	நல்லகண்ணு	திருநெல்வேலி மாவட்டம்.
15.	,,	மாணிக்கம்	
16.	,,	சோமசுந்தரம்	தென்னாற்காடு மாவட்டம்.
17.	,,	எஸ். நடராஜன்	
18.	,,	ஆர். முருகேசன்	
19.	,,	சி. கே. மாணிக்கம்	செங்கற்பட்டு மாவட்டம்.
20.	,,	எஸ். குருசாமி	— பாண்டிச்சேரி.
21.	,,	ஏ. முனுசாமி	— சேலம் மாவட்டம்.
22.	,,	எல். அப்பு	கோவை மாவட்டம்.
23.	,,	உஸ்மான்	

அகில இந்திய விவசாய சங்க மகாநாட்டுத் தீர்மானங்கள்

—★—

நிலப்பிரபுத்துவ ஒழிப்பு, உழுபவனுக்கு நிலம், வரம்பு கட்டும் பிரச்சினை பற்றிய தீர்மானம்

அகில இந்திய விவசாயிகள் சங்கம் ஆரம்பமான காலத்திலிருந்தே, சகலவிதமான உருவங்களிலும் நிலப்பிரபுத்துவத்தை ஒழிக்க வேண்டுமென்றும், நிலத்தை உழுபவர்களுக்கே விநியோகம் செய்யவேண்டுமென்றும், விவசாய அபிவிருத்திக்காகவும், பொதுவாகவே நமது பொருளாதார அபிவிருத்திக்காகவும் தன்னுடைய பிரதான கோஷமாகக் கொண்டிருந்தது.

மேலே சொன்ன குறிக்கோள்களைக் கருத்தில் கொண்டு நிலத்தின் மீதுள்ள ஏகபோகத் தன்மையை ஒழித்துக் கட்டவும், உபரி நிலங்களை விவசாயத் தொழிலாளிகளுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் பகிர்ந்தளிக்கவும், நிலஉடைமைகள்மீது வரம்பு கட்டவேண்டுமென்னும் கோஷத்தை சங்கம் பிரச்சாரம் செய்து வந்தது. சக்திவாய்ந்த விவசாயிகள் இயக்கத்தினால் நிர்ப்பந்திக்கப்பட்டு காங்கிரஸ் அரசாங்கங்கள், வரம்பு கட்டுவது உள்ளிட்ட விவசாய சீர்திருத்த சட்டங்களைக் கொண்டுவர வேண்டியதாயிற்று.

ஆனால் சென்ற 13 ஆண்டுகளாக காங்கிரஸ் அரசாங்கங்கள் கையாண்டுவரும் கொள்கை காரணமாக வரம்பு கட்டும் கோஷம் அமுல் நடத்தப்படுவதென்பது அநேகமாக பயனற்றதாகி விட்டது, என்பதை நிரூபித்துவிட்டது. வரம்புகட்டும் சட்டங்கள், மிக உயர்ந்தபட்சமாக ஆக்கப்பட்டுள்ளது. நிலப்பிரபுக்களால் செய்யப்பட்டுள்ள நில விற்பனைகள் மாற்றங்களுக்கு சட்ட பூர்வமான அங்கீகாரம் அளிக்கும் வகையில் சட்டங்களில் பல ஓட்டைகள் வைக்கப்பட்டுள்ளன. தோட்டம், மலைத்தோட்டங்கள், கரும்பு

விளைநிலங்கள், கூட்டுறவு பால்பண்ணை நிலங்கள், கால்நடைப் பண்ணை நிலங்கள், நன்கு நிர்வகிக்கப்டும் பண்ணை நிலங்கள் என்று சொல்லப்படுபவை என்பன போன்ற பல விதிவிலக்குகளுக்கு வசதிகள் சட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுவல்லாமல் சொந்தச்சாகுபடி என்பதன் பெயரால் நிலப்பிரபுக்களுக்குநிலமீட்சி உரிமையும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டங்களின் விளை வாக ஏற்பட்டுள்ள பலன் நிலப்பிரபுக்கள் பெரிய நிலப் பரப்புக்களை வைத்துக்கொள்ள முடிகிறது. நிலம் ஒரு சிலரிடம் குவிந்திருப்பது நீடிக்கிறது. ஏழைவிவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக் கும் பிரித்துக்கொடுப்பதற்கு நிலம் என்பதே அநேகமாக உபரி இல் லாமல் போய்விட்டது. மேலும் இத்தகைய சட்டங்கள் அதிகார வர்க்கத்தால் அமுல் நடத்தப்படுவதின் காரணமாக பெருவாரியான நில வெளியேற்றங்கள் ஏற்பட்டு அதன் விளைவாக விவசாயிகள் வாழ்வு நிலைகுலைவதில்போய் முடிந்திருக்கிறது. கேரளாவில் இருந்த கம்யூனிஸ்ட் மந்திரி சபையினுல் நிறைவேற்றப்பட்ட சட்டங்கூட சில அம்சங்களில் காங்கிரஸ் அரசாங்கத்தினுல் நிலச் சுவான்கள் நலன்களுக்காதரவாக திருத்தப்பட்டுள்ளது. இவைகளின் காரண மாக தேசம் பூராவும் ஏற்பட்டுள்ள ஒட்டு மொத்தமான விளைவு வரம்புகட்டும் சட்டங்கள் என்பது கிட்டத்தட்ட ஒரு கேலிக்கூத் தாகிவிட்டது. இந்த அடிப்படையில் அகில இந்திய விவசாயிகள் சங்கம் தன்னுடைய நிலச்சீர்திருத்த நடைமுறை என்ற காசிபூர் தீர்மானத்தை மீண்டும் ஊர்ஜிதம் செய்வதோடு, நில ஏகபோகத் தையும், நிலப்பிரபுத்துவ உறவுகளையும் தகர்த்து ஏழை விவசாயி களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும், தீவிரமான நிலச் சீர் திருத்த சட்டங்களின் மூலம் நிலத்தை வினியோகம் செய்தா லொழிய விவசாயத்தில் உற்பத்தி சக்திகளைக் கட்டவிழ்த்து விட முடியாது; நம்முடைய விவசாயப் பொருளாதாரமும், வேகமாக அபிவிருத்தி செய்ய முடியாது என்பதை வலியுறுத்த விரும்பு கிறது.

ஆகவே அ. இ. வி. சங்கத்தின் பதினெட்டாவது மகாநாடு எல்லா கிளைகளுக்கும் கீழ்க்கண்டவாறு அறைகூவல் விடுகிறது.

1. விவசாய சங்கத்தின் அடிப்படைக் கோரிக்கைகளை பிர பலப்படுத்துவது.

2. கீழ்க்கண்ட அடிப்படையில் சட்டங்களைத் திருத்துமாறு ஐக்கியமானதொரு இயக்கத்தைக் கட்டி வளர்ப்பது.

(அ) குத்தகை-வார சாகுபடிதாரர்கள் இவர்களை வெளி யேற்றுவதை அனுமதிக்கக்கூடாது. நிலப்பிரபுக்களாலும், பெரிய

நிலச்சுவான்தாரர்களாலும் தற்காலிகமான அல்லது நிரந்தர மான சாகுபடிதாரர்களை வெளியேற்றியதன் மூலம் ஏற்பட்டுள்ள சகல நில மீட்சிகளையும் செல்லத்தக்கதல்லவென்று அறிவிப்பு செய்தல்.

(ஆ) வரம்பின் அளவு குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும், நில ஏகபோகத்தை உடைக்கும் தன்மை வாய்ந்த நியாயமான அளவாக இருத்தல் வேண்டும், வி. தொழி லாளர்களுக்கும் ஏனைய விவசாயிகளுக்கும் பிரித்துக் கொடுக்கக் கூடிய அளவிற்கு போதுமான உபரி நிலம் கிடைக்கக்கூடிய வகை யிலும் இருக்க வேண்டும்.

(இ) நில உடைமைகளுக்கு வரம்பு கட்டும் நோக்கத் தையே பாழ்படுத்தும் வகையில் செய்துள்ள 1954-ம் வருடத்திற் குப்பிறகு நிலப்பிரபுக்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா நிலப் பிரிவினைகளையும், மாற்றங்களையும், செல்லத்தக்கதல்லவென்று அறிவிக்கப்பட்டு இனிமேலும் எந்த மாற்றமும் பிரிவினையும் அனுமதிக்கப்படக்கூடாது.

(ஈ) வீடுகட்டிக் கொள்வதற்கென்று நியாயமான இடம் ஒதுக்கிக்கொள்வதைத் தவிர எந்தவிதமான நிலமீட்சியும் அனுமதிக்கக்கூடாது.

(3) இன்று அமுலில் உள்ள சட்டங்களை எந்த அளவிற்கு சாத்தியமோ அந்த அளவு விவசாயிகளின் நலன்களுக்கு எந்த வகையில் பயன்படுத்த விவசாயிகளை ஒன்று திரட்டுவது, இதற் காக சங்கம் கீழ்க்கண்டவாறு கோருகிறது.

(அ) நிலச்சொந்தக்காரர்களுடைய உபரி நிலங்கள் என்ற வகையில் சர்க்காரின் கையில் இருக்கும் நிலங்களை உடனடியாக எடுத்துக்கொண்டு உடனே விவசாயத் தொழிலாளிகளுக்கும், நில மில்லாத விவசாயிகளுக்கும், ஏழை விவசாயிகளுக்கும் உடனடி யாக வினியோகம் செய்யப்பட வேண்டும்.

(ஆ) ஏற்கனவேயுள்ள சட்டங்கள் பிரதிநிதித்வம் வாய்ந்த விவசாயிகள் கமிட்டிகளின் ஒத்துழைப்புடன் அமுல் நடத்தப்பட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளைப் பூர்த்திசெய்வதற்காக ஒரு ஐக் கியமான, பலமான இயக்கத்தைக் கட்டுவதற்கு விவசாயப் பெருங் குடி மக்களை ஒன்று திரட்டுவதற்கான தேசீய இயக்கத்திற்கு வேண்டிய இணைப்பான திட்டத்தை மத்திய கிஸான் கவுன்சில்

போட்டுக்கொடுக்கவேண்டும் என்று அ இ வி. சங்கம் கட்டளையிடுகிறது.

அ. இ. வி. சங்கம் மேலும் எல்லாக் கட்சிகளையும் கூட்டத்தினர்களையும், ஸ்தாபனங்களையும் பொதுவாக எல்லா பொதுமக்களையும், குறிப்பாக தேசத்தின் துரிதமான வளர்ச்சிக்கும் விவசாயிகள் நலன்களை அடிப்படையாகக் கொண்ட உண்மையான நிலச்சீர்திருத்தத்திற்காகவும் நிற்கின்ற காங்கிரஸ்காரர்களையும் விவசாயிகளின் நலன்களுக்காக உச்சவரம்பு சட்டங்களைத் திருத்தவும், அமுல் நடத்துவதற்குமான இந்த விரிவான ஐக்கிய வெகுஜன இயக்கத்தைக் கட்டுவதற்கு அ. இ. வி. சங்கம் விடுத்துள்ள வேண்டுகோளுக்கு செவிசாய்க்குமாறு கேட்டுக்கொள்கிறது.

அதிகரித்துக் கொண்டுவரும் வரிப்பளுவை எதிர்த்து

1. திட்டத்துக்கு மூலதனம் என்பதன் பெயரால் அரசாங்கம் அனுஷ்டிக்கும் கொள்கைகளின் காரணமாக சாதாரணப் பொது மக்கள் மீது மேலும் மேலும் சுமத்திக்கொண்டே போகும் நேரடி, மறைமுக வரிப்பளுவையும், அதே சமயத்தில் தேசத்திலுள்ள ஏக போக முதலாளிகளுக்கும், தொழில் அதிபர்களுக்கும் பெரும் அளவில் கொடுக்கப்படும் வரி நிவாரணங்களையும் அகில இந்திய விவசாயிகள் சங்கம் விடாப்பிடியாக எதிர்த்து வந்திருக்கிறது.

2. மத்திய சர்க்காரின் மொத்த வரி வரவினங்கள் 1948-49ல் 358.55 கோடியாக இருந்தது. 1960-61ல் அது 848-5 கோடியாக உயர்ந்தது, 1961-62ம் வருஷத்துக்கு 916.00 கோடி செலவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3. இதுபோன்றே ராஜ்ய சர்க்காரின் வரி வருமானங்களும் பெரிய அளவுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும், பல இனங்களில் சாதாரண மக்கள்மீது வரிகளைச் சுமத்துவதன் மூலம், அபரிமிதமாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

4. இரண்டாவது திட்டத்தின் ஐந்து வருடகால கட்டத்தில்' மத்திய சர்க்கார் வரிகளின்மூலம் வருமானத்தை ரூ. 800 கோடியாக்கியுள்ளது. ராஜ்ய சர்க்கார்கள் சுமார் 200 கோடிகளாக்கிக் கொண்டுள்ளது.

5. வரப்போகிற மூன்றாவது திட்ட ஐந்தாண்டு காலத்தில் மத்திய சர்க்காராலும் ராஜ்ய சர்க்கார்களாலும் வசூலிக்கப்படவிருக்கிற அதிகப்படியான வரிகள் ரூ. 1650 கோடிகளாகும்.

(மத்திய சர்க்கார் 1100 கோடியும் ராஜ்ய சர்க்கார்கள் மட்டத்தில் 550 கோடியும்.)

6. மத்திய சர்க்கார் மட்டத்திலும், ராஜ்ய சர்க்கார் மட்டத்திலும் ஏற்படவிருக்கும் வரி வருமான அதிகரிப்பு பெரும்பாலும் சாதாரண பொதுமக்கள் மீது விழும் நேரடி மறைமுக வரிகளை உயர்த்துவதன் மூலமும் அதேசமயத்தில் ஜனத்தொகையில் பணக்காரப் பகுதிகளுக்கு விழும் நேரடி வரிகளுக்கு நிவாரண மளிப்பதன் மூலமும் ஏற்படுவதாகவேயிருக்கும்.

7. கடல் சுங்கம், எக்சைஸ் முதலிய மறைமுக வரி இனங்கள் மூலமாக மத்திய சர்க்காருக்குக் கிடைக்கும் வருமானம் 1948-49ல் ரூ 176·79 கோடிகளாக இருந்தது. 1956-57ல் ரூ 386.93 கோடிகளாகவும் 1960-61ல் ரூ 571.65 கோடிகளாகவும், 1961-62ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ 630.41 கோடிகளாக மதிப்பிடப்பட்டுமிருக்கிறது. அதேசமயம் நேரடி வரி, இனங்களான கார்ப்பரேஷன் வரி, வருமானவரி, எஸ்டேட்வரி, செல்வவரி, செலவினங்கள்மீது வரி, இனும்களின் மீது வரி முதலியவைகள் 1948-49ல் ரூ. 181·76 கோடிகளாகவும், 1958.59ல் ரூ. 240.33 கோடிகளாகவும் 1960-61 ரூ 277.20 கோடிகளாகவும், 1961-62க்கு ரூ 286.60 கோடிகளாக மதிப்பிடப்பட்டும் உள்ளது. வருமான வரிமட்டும் 1958-59ல் ரூ. 172.01 கோடிகளாக இருந்தது, 1961-62ல் ரூ 133 கோடிகளாக வீழ்ந்துள்ளது.

8. நேரடி வரிகள் மூலமாக மத்திய சர்க்காருக்குக் கிடைத்த பகுதி 1948-49ல் 50 சதவிகிதத்துக்கு மேல் இருந்தது. 1960-61ல் 33.66 சதவிகிதமாகக் குறைந்து 1961.62 வருஷம் எதிர் பார்க்கும் சதமானம் 31.8 ஆக மேலும் குறைந்துள்ளது.

9. சாதாரணப் பொதுஜனங்கள் உபயோகிக்கும் அத்தியாவசியத் தேவைப்பொருள்கள்மீது அதிகப்படியான எக்சைஸ் வரிகளை சுமத்துவதன் மூலம்தான் வரிகள் வருமானத்தின் பெரும் பகுதி உயர்வு ஏற்படுகிறது. மத்தியசர்க்கார் யூனியன் எக்சைஸ் வரியின் மூலமாக வசூலிக்கும் தொகை 1948-48ல் ரூ 50.68 கோடிகளாக இருந்தது, 1956-57ல் இது 190.43 கோடி ரூபாயாக உயர்ந்தது, 1961 61ல் ரூ394.98 கோடிகளாக மேலும் உயர்ந்தது. 1961-62ல் ரூ 437.14 கோடிகள் எதிர்பார்க்கப்படும் தொகையாக வந்துள்ளது.

1961.62க்கான வரவு செலவுப் பிரேரேபனைகளில் கிட்டத்தட்ட 63 கோடி ரூபாய்கள் அதிகமான வரிப்பளு போடப்பட்டுள்ளது. இதில் 30 கோடி ரூபாய் சாதாரண ஜனங்கள் உப

யோகப்படுத்தும் பண்டங்கள்மீது போடப்பட்டுள்ள அதிகப்படி எக்ஸைஸ் வரியாகும்.

10. இத்தகைய மறைமுக வரிகள் மூலம் ஏற்படும் பிரதான பளு பூராவும் சுமத்தப்படுவது மொத்த ஜனத்தொகையில் 70 சதவிகிதத்தினராக உள்ள நமது தேசத்தின் விவசாயப் பெருங்குடி மக்கள். அவர்கள்தான் இப்பண்டங்களை உபயோகிக்கும் பிரதான பகுதியினர். அதே சமயம் இந்த விவசாயப் பெருங்குடி மக்கள், அவர்களது நிலத்தின்மீதும், உற்பத்தியின்மீதும் விழுகிற இதர பல வரிகளையும் தாங்க வேண்டியிருக்கிறது.

11. இந்தக் காலகட்டத்தில் எல்லா ராஜ்யங்களிலும், நில வரி, தண்ணீர் பாசன வரி, ஸ்தல வரிகள், செஸ்கள் முதலிய நேரடி வரிப்பளு பலமடங்கு வளர்ந்துள்ளது இத்தகைய வரி அதிகரிப்புக்கள் போதாதென்று பாசன வசதிகளும் இதர வசதிகளும் செய்துகொடுத்தோமென்று பெரிய அளவு அபிவிருத்தி வரியும் போடப்பட்டுள்ளது.

12 இவைகள் ஒருபுறமிருக்க, அரசாங்கமும் திட்டமிடுவோரும் "விவசாய அரங்கம்" இந்தியப் பொருளாதாரத்தில் வளர்ந்துவரும் வரிப் பளுவில் சரியான பங்கை ஏற்றுக்கொள்வதில்லை என்ற ஒரு அபிப்பிராயத்தை உண்டுபண்ண விரும்புகிறார்கள். மூன்றாவது திட்டத்தின் அறிக்கையில், நில வரியையும் தண்ணீர் தீர்வையையும் மேலும் அதிகப்படுத்தவும், இதர பல வரிகளை நிலத்தின்மீது சுமத்தவும், அபிவிருத்தி வரியைப் பெரிய அளவு வசூலிக்கவும் திட்டவட்டமான பிரேரேபணைகள் வைக்கப்பட்டுள்ளன.

13. இந்தக் கொள்கையைப் பின்பற்றி பல்வேறு மாநில அரசாங்கங்களும் தமது 1961-62-ம் ஆண்டைய பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வரிகளை உயர்த்துவதென்று ஏற்கனவே தீர்மானித்து விட்டார்கள். பஞ்சாப் மாநிலத்தில் மேலும் 50 சதவிகிதம் நிலவரி உயர்த்தப்பட்டிருக்கிறது. கேரள அரசும் நிலவரியை ஏக்ராவிற்கு மேலும் இரண்டு ரூபாய் என்ற விகிதத்தில் உயர்த்த ஆலோசித்திருக்கிறது. வங்கம், ராஜஸ்தான், மைசூர் இன்னும் பல மாநிலங்களில் கால்வாய் வரி (Canal Tax) விதிக்க உத்தேசித்துள்ளனர்.

14. மத்திய அரசு மறைமுக வரிப் பளுக்களைச் சுமத்தியிருப்பதோடு மாநில அரசாங்கங்களும் கணிசமான அளவு வரிப்பளுக்களைச் சுமத்தியிருக்கின்றன. உதாரணமாக விற்பனை வரி, பஸ் கட்டண வரி, கோர்ட் ஸ்டாம்ப், கோர்ட் கட்டணங்களையும்

இதுபோன்ற இன்னும் பல மறைமுக வரிகளையும் உயர்த்தி யிருக்கின்றன.

15 ஐந்தாண்டுத் திட்டப் பணிகளுக்கு நிதி திரட்டுகிறோம் என்ற பெயரால் பொதுமக்கள் மீது, குறிப்பாக விவசாய வர்க்கத்தின்மீது மேற் கூறியவாறு தாங்கமுடியாத வரிப்பளுவைச் சுமத்துவதை அகில இந்திய விவசாய சங்கம் எதிர்க்கிறது.

16 உள்நாட்டு, வெளிநாட்டு ஏகபோக முதலாளிகளுக்கு ஏராளமான வரிச் சலுகைகள் அளிக்கும் வரையிலும், மாஜி ராஜாக்களுக்கு மானியம் அளிக்கும் வரையிலும், ஏறத்தாழ 700 கோடி ரூபாய் ஜமீன்தார், ஜாகீர்தார் போன்ற பெரும் நிலப்பிரபுக் களுக்கு நஷ்டஈடு கொடுக்கும் வரையிலும், இங்குள்ள பிரிட்டிஷ், இதர அன்னிய நாடுகளின் ஏகபோக முதலாளிகள் லாபம் என்ற பெயராலும், இன்னும் இதர வழிகளிலும் லட்சக்கணக்கான ரூபாய்களை தங்கள் நாடுகளுக்கு அனுப்புவதை அனுமதிக்கும் வரையிலும், ஏறத்தாழ 250 கோடிரூபாய் வரையில் வரி செலுத் தாதிருக்கின்ற பெரு முதலாளிகளிடமிருந்து வரியை வசூலிக்காத வரையிலும், நாட்டின் பொருளாதாரப் புனர் நிர்மாணப் பணி களுக்காகவும், சமூக நலப் பணிகளுக்காகவும் நிதி மூலாதாரங் களைத் திரட்டுகிறோம் என்று அரசாங்கம் பேசுவதற்கு உரிமை யில்லை. திரட்டப்படுகின்ற நிதியில் பெரும் பகுதியும் என்று மில்லாத அளவில் இன்று விரிந்திருக்கிற அதிகாரவர்க்க அரசாங்க இயந்திரத்தைப் பாதுகாப்பதற்குத்தான் செலவு செய்யப்படு கிறது. முக்கியமாக பொதுமக்களை அடக்கி ஒடுக்குவதற்குத்தான் இந்த அதிகார வர்க்க அரசாங்க இயந்திரம் பயன்படுத்தப் படுகிறது. மேலும் அபிவிருத்திப் பணிகளில் செலவிடப்படும் பணத்திலும் லட்சக்கணக்கான ரூபாய்கள் மாயமாய் மறைந்து விடுகின்றன; வீணாகச் செலவிடப்படுகின்றன; அதிகமாகச் செல விடப்படுகின்றன; லஞ்ச ஊழலும் தலைவிரித்தாடுகின்றன. அபி விருத்திப் பணிகளில் செலவிடப்படும் தொகையை கண்காணித்து முறைப்படுத்துவதற்கு பொதுமக்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

17. அபிவிருத்தி வரி, பல வரி உயர்வுகள், நீர்ப்பாசன வரி, இன்னும் இதர வரிகளை எதிர்த்தும் மத்திய அரசும், மாநில அர சும் விதிக்கும் மறைமுக வரிச்சுமைகளை எதிர்த்தும் பல்வேறு மாநிலங்களில் விவசாயிகள் போராடினார்கள். அவர்களை அகில இந்திய விவசாய சங்கம் வாழ்த்துகிறது. அரசாங்கம் என்று மில்லாத அளவிற்கு வரிப்பளுவை சுமத்தியதை எதிர்த்து இதர பகுதி மக்களும் இயக்கம் நடத்தினார்கள். அதனையும் அகில இந் திய விவசாய சங்கம் கவனத்தில் கொண்டிருக்கிறது.

18. அரசாங்கத்தின் வரிவிதிப்புக் கொள்கையை எதிர்த்து கடுமையான போராட்டம் நடத்துமாறு விவசாயிகளை அகில இந்திய விவசாய சங்கம் அறைகூவி அழைக்கிறது. அதற்காக அரசாங்கத்தின் வரிவிதிப்புக் கொள்கைக்கு எதிராக எழுந்துள்ள எல்லா ஸ்தாபனங்கள் அல்லது போராடும் மக்களுடன் கட்சிவேறுபாடின்றி ஒன்றுபட்டு நிற்குமாறும் கேட்டுக்கொள்கிறது.

19. அரசாங்கத்தின் வரி விதிப்புக் கொள்கைக்கு எதிராக 1961-ம் ஆண்டு மே மாதம் முதல் நாடு தழுவிய இயக்கம் நடத்த முன்வருமாறும், உழைக்கும் மக்களின் மீது தாங்கொணாத வரிச் சுமையைச் சுமத்த முயல்வதைத் தடுப்பதற்கு ஒரு சக்திவாய்ந்த இயக்கத்தைக் கட்டுவதற்கு முன்வருமாறும் குறிப்பாக அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசையும், இதர தொழிலாளி வர்க்க ஸ்தாபனங்களையும், எல்லாதரப்பட்ட மக்களையும் அகில இந்திய விவசாய சங்கம் அறைகூவி அழைக்கிறது.

விவசாயத் தொழிலாளர்களைப் பற்றி

1. கடந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் விவசாயத் தொழிலாளர்களின் நிலைமையில் அபிவிருத்தி ஏற்படாததோடு, மேலும் நிலைமை சீர்கேடடைந்தது என்பதை இம்மாநாடு எச்சரிக்கையோடு சுட்டிக் காட்டுகிறது.

2. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் இந்திய அரசின் தொழிலாளர்துறை அமைச்சரகம் இரண்டாவது விவசாயத் தொழிலாளர் விசாரணைக் குழுவை நியமித்தது இரண்டாவது திட்டகால துவக்கத்தில் விசாரணை நடத்திய இக்குழு விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வு நசித்து வந்திருப்பதை சுட்டிக் காட்டியது. 1950 51ம் ஆண்டு விவசாயத் தொழிலாளர்கள் வேலையில்லாதிருந்த நாட்கள் ஒரு ஆண்டில் 120 ஆக இருந்தது; ஆனால் 1956-57ம் ஆண்டு 128 நாட்களாக உயர்ந்தது. 1950-51ம் ஆண்டு ஒரு விவசாய (ஆண்) தொழிலாளியின் தினசரி சம்பளம் ரூ. 1-09 ஆக இருந்தது. அந்தச் சம்பளமும் 1956-57ம் ஆண்டு 96 ந.பை. ஆகக் குறைந்தது. பெண் தொழிலாளியின் சம்பளமும் 68 நயா பைசாவிலிருந்து 53 நயா பைசாவாகக் குறைந்தது சிறுவர்கள் வேலையில் ஈடுபடுத்தப்பட்ட (Child Labour) நாட்கள் அதிகரித்தது எவ்வளவு தூரம் சுரண்டல் அதிகரித்திருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது. 1950 51ம் ஆண்டு சிறுவர்களின் வேலை நாட்கள் (ஒரு ஆண்டில்) 165 ஆக இருந்தது. ஆனால் 1956-57ம் ஆண்டில் அவர்கள் வேலையில் ஈடுபடுத்தப்பட்ட நாட்களும் 204 ஆக உயர்ந்தது. ஒரு விவசாயத் தொழிலாளியின் குடும்ப சராசரி

ஒரு ஆண்டு வருமானம் 1950ம் ஆண்டில் ரூ. 447 ஆக இருந்தது. ஆனால் 1956 57ம் ஆண்டிலோ ரூ. 437 ஆகக் குறைந்தது. ஆனால் அதே சமயத்தில் ஒரு விவசாயத் தொழிலாளியின் குடும்பத்தின் சராசரிச் செலவு ரூ. 461-லிருந்து ரூ 617 ஆக உயர்ந்தது. ஒவ்வொரு குடும்பமும் பட்ட சராசரிக் கடன் தொகையும் ரூ 47 லிருந்து ரூ. 88 ஆக உயர்ந்தது. மொத்த விவசாயத் தொழிலாளர் குடும்பங்களில் கடன்பட்ட குடும்பங்கள் 45 சத விகிதமாகவிருந்ததும் 65 சதவிகிதமாக உயர்ந்தது.

3. இரண்டாவது திட்ட காலத்தின் தொடக்கத்திலிருந்த மேற்கூறிய மோசமான நிலைமை திட்ட காலம் முழுமையும் மேலும் மேலும் மோசமாகிக்கொண்டே சென்றது; விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையில் முன்னேற்றம் ஏற்படவே யில்லை. இதுமட்டுமல்ல, இரண்டாவது திட்ட காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்ற நிலவெளியேற்றமானது விவசாயத் தொழிலாளர்களையும் பாதித்தது. அதனால் கணிசமான விவசாயத் தொழிலா ளர்களின் நிலைமை மேலும் சீர்கேடுற்றது.

4. மக்கட் தொகையில் பெரும்பான்மையினராகவுள்ள விவ சாயத் தொழிலாளர்களின் வருந்தத் தக்க நிலை வளர்ந்ததனால் நம்முடைய பொருளாதாரத்திலும் அபாயகரமான விளைவுகள் ஏற் பட்டிருக்கின்றன. உற்பத்தி சக்திகளைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது; உள்நாட்டு மார்க்கெட்டும் சுருங்கிவிட் டது. பெரும்பான்மை மக்கள் கொடிய வறுமையிலும், அறியாமை யிலும் உழல்கிறார்கள். அதன் விளைவாக தேசிய கலாச்சாரத்தின் வளர்ச்சி தடைப்பட்டது; ஜனநாயகத்தின் அடித்தளம் பலஹீன மாவதற்கு ஏதுவாயிற்று; விவசாய அபிவிருத்தியிலும் தேக்க நிலை ஏற்படுவது சாத்தியமாயிற்று. நம்முடைய தேசியப் பொருளா தாரம் துரிதமாக வளரவேண்டிய பாதையில் ஏற்பட்டுள்ள இத் தடைகளையெல்லாம் நீக்கவேண்டும். அதற்கு விவசாயத் தொழி லாளர்களை எதிர்நோக்கியுள்ள அடிப்படைப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பது அவசர அவசியமாகும். அவர்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்துவதும், கட்டுண்டு கிடக்கும் உற்பத்தி சக்திகளை கட்டவிழ்த்து விடுவதும் இன்றைய அவசியப் பணியாகும்; அவ சரப் பணி ஆகும்

5. ஆனால், விவசாயத் தொழிலாளர்களை எதிர்நோக்கியிருக் கின்ற பிரச்னைகளுக்குத் தீர்வுகாண அரசாங்கம் இதுவரை எடுத் துள்ள முயற்சிகளினால் நற்பலன்கள் விளையவில்லை; பிரச்னைகளுக் குத் தீர்வுகாண்பதில் அசிரத்தையாக இருக்கிறது; பிரச்னைகளுக்

குத் தீர்வுகாண தயங்குகிறது. இதனை இம்மாநாடு வருத்தத்துடன் சுட்டிக்காட்டுகிறது. நிலஉடைமைக்கு வரம்புகட்டுவதில் தோல்வி ஏற்பட்டது; குறிப்பிடத் தக்க அளவு விநியோகத்திற்கு நிலம் கிடைக்கவில்லை. ஏன்? அரசாங்கத்திற்குச் சொந்தமான தரிசு நிலங்கள்கூட நிலமில்லாத உழவர்களுக்கு விநியோகிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக பல மாநிலங்களில் அரசாங்க தரிசு நிலங்களில் விவசாயம் செய்துவந்த விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இதுவரையில் விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யவில்லை. இன்னும் விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசாங்க மருத்துவ, கல்வி வசதிகள், குடியிருப்பு வசதிகள் அளிக்கப்படவில்லை. இந்தப் பிரச்னைகளில் இதுவரை அரசாங்கம் கவனம் செலுத்தவேயில்லை. இங்ஙனம் விவசாயத் தொழிலாளர்கள் பரிபூரணமாக அலட்சியப்படுத்தப்பட்டு விட்டார்கள்; இன்னும் கூறப்போனால் சில விஷயங்களில் அவர்கள் மிகவும் மோசமாகவும் நடத்தப்படுகிறார்கள்.

6. சென்ற ஆண்டு நாடு முழுமையும் தங்கள் கோரிக்கைகளுக்காகவும், உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவும், வீரமிக்க போராட்டம் நடத்திய விவசாயத் தொழிலாளர்களுக்கு இம்மாநாடு வாழ்த்துக்கூறுகிறது. அரசாங்கத் தரிசு நிலங்களை விநியோகிக்க வேண்டும் என்பதற்காக ஆந்திர மாநிலத்தில் பெரும் இயக்கம் நடைபெற்றது; பெரும் போராட்டம் நடத்தினார்கள். அதன் விளைவாக தரிசு நிலங்களை விநியோகிக்க அரசாங்கம் இணங்கியது; அதற்கான ஆரம்ப நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கிறது. மராட்டிய மாநில விவசாயத் தொழிலாளர்களும் இதே கோரிக்கைக்காகப் போராடினார்கள்; ஆயிரமாயிரம் தொழிலாளர்கள் சத்தியாக்கிரகம் செய்து சிறைபுகுந்தனர். பஞ்சாப் மாநிலத்திலும் தரிசுநிலக் கோரிக்கைக்காகவும், வரிப்பளுவிற்கு எதிராகவும் போராடினார்கள். கேரளத்தில் நம்பூதிரிபாட் அமைச்சரவை நிறைவேற்றிய நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் அடிப்படையையே திருத்துவதற்கு இன்றைய அரசாங்கம் முயன்றது. இதனை எதிர்த்தும், ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட சட்டத்தை செயல்படுத்தக் கோரியும் கேரள விவசாயத் தொழிலாளர்கள் பெரும் இயக்கம் நடத்தினார்கள். அரசாங்கத் தரிசு நிலங்களைப் பகிர்ந்தளிக்கக் கோரியும் பல பகுதிகளில் கூலி உயர்வு அளிக்கக் கோரியும் மேற்கு வங்க விவசாயத் தொழிலாளர்களும் போராட்டம் நடத்தினார்கள். தமிழக அரசு கொண்டுவந்திருக்கும் நிலச்சீர்திருத்த மசோதாவிற்கு தமிழ்நாடு விவசாய சங்கம் முன்வைத்துள்ள திருத்தங்களை மேற்கொள்ளக் கோரி நடைபெற்ற இயக்

த்தில் தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்களும் பெரும் பங்குகொண்டனர்; அவர்கள் ஒன்றுபட்டு நின்றதன் காரணமாக 25 சதவிகித கூலி உயர்வும் பெற்றனர். இங்ஙனம் பல சக்தி வாய்ந்த இயக்கங்கள் நடத்தி பல கோரிக்கைகளைப் பெற்றனர்; மேலும் விவசாயத் தொழிலாளர்களின் நிலைமை சீர்கேடடையா வண்ணம் தடுத்து நிறுத்தினர்.

7. என்றாலும், இன்னும் நாட்டின் பல பகுதிகளிலும், பல மாநிலங்களிலும் விவசாயத் தொழிலாளர் இயக்கம் பலஹீனமாகத்தான் இருக்கிறது. விவசாயத் தொழிலாளர்கள் ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்படவில்லை என்பதை அகில இந்திய விவசாய சங்கம் உணருகிறது. இந்த பலஹீனத்தை நிலப் பிரபுக்கள் பயன்படுத்திக் கொண்டு என்றும் உழைக்கும் மக்களில் பெரும் பகுதியினரை தங்கள் பிடியிலும், செல்வாக்கிலும் வைத்திருப்பதற்கும், அவர்களை எந்தவித இயக்கத்திலும் பங்கு கொள்ளாமல் தடுப்பதற்கும் எல்லாவித முயற்சிகளையும் செய்கிறார்கள். சில இடங்களில் நிலப்பிரபுக்கள் தங்கள் பணச் செல்வாக்கையும் அரசியல் அதிகாரத்தையும் பயன்படுத்தி ஸ்தாபன ரீதியாகத் திரண்ட, உருவான இயக்கத்தையும் வகுப்புவாத அடிப்படையில் பிளவுபடுத்த முடிகிறது. இந்தப் போக்கினைத் தடுக்காவிட்டால், ஒரு சக்தி வாய்ந்த விவசாயத் தொழிலாளர் இயக்கத்தைக் கட்டாவிட்டால் மிகமிக அபாயகரமான போக்கு நீடித்து விவசாய இயக்கத்திற்கே பெரும் தீங்கு விளையும்; சிதறுண்டு நிற்கும்.

8. அடிப்படையான, இதுவரை அடையமுடியாத சீர்திருத்தங்களை மேற்கொள்ளுமாறு செய்வதற்கு விவசாயத் தொழிலாளர்களும், இதர விவசாய வர்க்கப் பகுதியினரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டியது அவசியமாகும். அத்தகைய ஒற்றுமைதான் இன்றைய விவசாய இயக்கத்திற்குத் தேவையாகும்; அவசரத் தேவையாகும். அத்தகைய ஒன்றுபட்ட இயக்கத்தைக் கட்டுவதற்கான சாத்தியப்பாடுகளும் வளர்ந்து வருகின்றன. விவசாயிகள் மீதும், விவசாயத் தொழிலாளர்கள் மீதும் ஆளும் வர்க்கமும், அரசாங்கமும் தொடுக்கும் இரக்கமற்ற தாக்குதல்களும், விவசாய அரங்கத்தில் ஏற்பட்டுள்ள பரிதாப நிலைமை ஒன்றுபட்ட இயக்கத்திற்கான சாத்தியப்பாடுகளை ஏற்படுத்தி வருகின்றன.

9. விவசாய மக்களையும், விவசாயத் தொழிலாளர்களையும் எதிர்நோக்கியிருக்கின்ற அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாவிட்டால், தீர்வு காணாதவரையில் தேசிய புனர்வாழ்வு என்ற லட்சியத்தை அடையமுடியாது என்பதை மீண்டும் இம் மாநாடு வலியுறுத்திக் கூறுகிறது. எனவே உண்மையான தேசியப்

புனர்வாழ்வு ஏற்பட வேண்டுமாயின் கீழ்க்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்.

(அ) விவசாய மக்களின், விவசாயத் தொழிலாளர்களின் நலன் கருதி அடிப்படையான நிலச் சீர்திருத்தம் செய்ய வேண்டும்.

(ஆ) பயிர் செய்வதற்குத் தகுதியுள்ள தரிசு நிலங்களை உடனடியாக விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிலமில்லாத விவசாயிகளுக்கும் உடனடியாக விநியோகிக்கவேண்டும்.

(இ உடனடியாக விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலிச் சட்டத்தை செயல்படுத்தவேண்டும்: அவர்களுக்கு ஆண்டு முழுமையும் வேலைவாய்ப்பு அளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

(ஈ) விவசாயிகளின், விவசாயத் தொழிலாளர்களின் நலன் கருதி திட்டங்கள் புனரமைக்கப்பட வேண்டும். அரசாங்கம் அளிக்கும் கடன்களும், மானியங்களும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் கிடைக்கவேண்டும். அதற்கு பல்வேறு கூட்டுறவு சொசைட்டிகள் நிறுவப்படவேண்டும். கான்ட்ராக்ட் முறையில் ஏராளமான பணம் வீணவதைத் தடுக்க அபிவிருத்திப் பணிகளை சொசைட்டிகளிடம் ஒப்படைக்கவேண்டும்.

(உ) குடியிருப்பு மனைகளிலிருந்து விவசாயத் தொழிலாளர்கள் வெளியேற்றப்படுவதை உடனடியாகத் தடைசெய்ய வேண்டும்.

விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் ஒன்றுபடுத்தி, பொதுவான நாடு தழுவிய மகத்தான இயக்கத்தை உருவாக்கி மேற்கூறிய கோரிக்கைகளுக்காகப் போராடுவதற்கு அகில இந்திய விவசாய சங்கம் பிரதிக்ஞை எடுத்துக்கொள்கிறது. விவசாய அரங்கின் மேற்கூறிய அடிப்படைச் சீர்திருத்தங்களுக்காகப் போராடுவதற்கும் சபதம் எடுத்துக்கொள்கிறது. எனவே, மேற்கூறிய அடிப்படைச் சீர்திருத்தங்களுக்காக அயர்வு சோர்வின்றிப் பணியாற்றுங்கள், கிராமப்புற மக்களை எதிர்நோக்கியிருக்கின்ற பிரச்னைகளுக்காக பொதுவான நடவடிக்கை எடுப்பதன்மூலம் விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் வர்க்க உணர்வை ஊட்டுங்கள் என்று எல்லா கீழ்மட்ட கிளைகளையும் அகில இந்திய விவசாய சங்கம் கேட்டுக்கொள்கிறது.

கிராமப்புற விவசாயிகளின் கடன்களைப்பற்றி

கடந்த பத்தாண்டுகளாக விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களில் பெரும்பான்மையினரின் நிலைமை சீர்கேடடைந்தது; எல்லாவற்றையும் இழந்து திவாலாகின்ற நிலைமை வளர்ந்தது. எனவே இந்த நாட்டிலுள்ள விவசாயிகளின் கடன்பிரச்னை தீராப் பிரச்னையாக, கடுமையான பிரச்னையாக ஆகிவிட்டது. விவசாய உற்பத்திப் பொருட்களின் விலைவாசிக்கும் விவசாயிகள் வாங்குகிற தொழில் உற்பத்திப் பொருள்களின் விலைவாசிக்குமிடையேயுள்ள இடைவெளி அதிகரித்திருக்கிறது. கடந்த பத்தாண்டு காலத்தில் அரசாங்கம் விதிக்கின்ற மறைமுக வரியும் இரட்டிப்பு மடங்காகி யிருக்கிறது. எனவே கிராமப்புற விவசாயிகள்பட்டிருக்கின்ற கடன் பிரச்னை கிராமீயப் பொருளாதாரத்தின் அவசரப் பிரச்னையாகி விட்டது; கிராமீயப் பொருளாதாரத்தை அழுத்திக்கொண்டிருக் கிற பிரச்னையாகி விட்டது.

அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் கிராமக் கடன் பிரச்னைக்குத் தீர்வுகாணவில்லை. அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை மிகச் சொற்பமானது; பிரச்னையின் நுனியைக்கூடத் தொடுவதற்குப் போதுமானதாக இல்லை. விவசாயக் கடன்களைத் தீர்ப்பதற்கு மொத்தம் 800 கோடி ரூபாய் தேவை என்று 1954-55-ம் ஆண்டு கணக்கிடப்பட்டது. ஆனால் இன்று விவசாயக் கடன்களைத் தீர்ப்பதற்கு ஆயிரம் கோடி ரூபாய் தேவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 1953 54ம் ஆண்டில் கிராமப் பகுதி களுக்கு எவ்வளவு கடன்தொகை தேவைப்பட்டதோ அதில் 6 சத விகிதத் தொகையைத்தான் கூட்டுறவு சொசைட்டிகளின் மூல மாகவும், நேரடித் தக்காவிக் கடன்கள் மூலமாகவும அரசாங்கம் அளித்தது. இவ்வாறு அரசாங்கம் அளித்த கடன்தொகை இரண் டாவது திட்ட காலத்தில் பத்து சத விகிதமாக அதிகரித்தது. மூன் றுவது திட்டகாலத்தில் அரசாங்கம் தேவையில் 20 சத விகித கடன்தொகையை மேற்கூறிய வழிகளில் தர விரும்புகிறது. இங் ஙனம் மூன்றுவது திட்ட காலத்தில் அரசாங்கம் விரும்புகிறது போன்றே கிராமப் பகுதி விவசாயிகளுக்கு கடன்தொகை அளித்த போதிலும், விவசாயிகளின் கடன் பிரச்னை தீர்க்கப்படாது, இருந்தவாறேதான் இருக்கும்.

இரண்டாவது திட்ட காலத்தில் கூட்டுறவு சொசைட்டி களும், அதன் நிதி வசதிகளும் அதிகரித்திருக்கின்றன. ஆனால் கூட்டுறவு ஸ்தாபனங்களைப் பரிசீலனை செய்த இந்திய ரிசர்வ் பாங் கின் அறிக்கை சில உண்மைகளை வெளியிடுகிறது. "கிராமப் பகுதி நிதி வசதிகளில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் அளிக்கும் கடன்

தொகை மிக அற்பமான இடத்தையே பிடித்திருக்கிறது" என்று கூறுகிறது. அதாவது கிராமப் புற விவசாயிகளுக்குத் தேவையான கடன் தொகையில் கூட்டுறவு ஸ்தாபனங்களின்மூலம் மிக மிகக் குறைந்த தொகையே கிடைத்திருக்கிறது. "அங்ஙனம் அளிக்கப்பட்ட கடன் தொகையும், சிறிய, நடுத்தர விவசாயிகளுக்கு அளித்த கடன் தொகையோடு பெரும் நிலச் சுவான்தார்களுக்கு அளிக்கப்பட்ட கடன்தொகையை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பெரும் நிலச்சுவான்தார்களுக்குத்தான் அளிக்கப்பட்டிருக்கிறது; பெரும் நிலச்சுவான்தார்களுக்குள்ளும் மிகப் பெரும் நிலப் பிரபுக்களுக்குத்தான் அளிக்கப்பட்டிருக்கிறது" என்றும் அந்த அறிக்கை கூறுகிறது,

பொதுவாக கூட்டுறவு ஸ்தாபனங்கள் யாரால் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன? ஏற்கனவே தனிப்பட்ட முறையில் சலுகைகளும், நன்மைகளும் பெற்றுவருகிற நல்ல நிலைமையிலுள்ளவர்கள் மேலும் பல சலுகைகளையும், நன்மைகளையும் பெறுவதற்காக ஏற்படுத்தியிருக்கிறார்கள். கூட்டுறவு சொஸைட்டிகளின் ஏழை உறுப்பினர்கள் கிராமப்புற சுரண்டல்காரர்களின் கைக் கருவிகளாக இருப்பதையும் அடிக்கடி பார்க்கிறோம். பல கூட்டுறவு சொஸைட்டிகள் ஒரு சிறு கும்பலின், சுயநலக்காரர்களின் சட்டைப் பைக்குள் இருக்கிற ஸ்தாபனங்களாக இருக்கின்றன. அத்துடன் ஆளும் கட்சியினரால் ஏற்படுத்தப்பட்டு, அவர்களாலேயே நடத்தப்படுகிற கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குத்தான் அரசாங்கமும் சலுகைகள் அளிக்கிறது; அரசாங்கமும் பாரபட்சமாகத்தான் நடந்துகொள்கிறது. எனவே கூட்டுறவு சொஸைட்டிகளின் மூலம் கிடைக்கின்ற மிகச் சொற்பமான உதவிகூட விவசாயத் தொழிலாளர்களுக்கோ, ஏழை விவசாயிகளுக்கோ, ஏன் நடுத்தர விவசாயிகளுக்கோ கூட கிடைப்பதில்லை என்பதைப் பார்த்து வியப்படைய வேண்டியதில்லை.

அடித்தளத்திலிருக்கின்ற ஏழை விவசாயிகளில் பெரும் பகுதியினர், நம்முடைய விவசாயப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருப்பவர்கள் கிடைத்ததைக் கொண்டு அவர்களால் இயன்றதைச் செய்யக்கூடிய நிலைமையில் விடப்பட்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் அநியாய வட்டிக்குக் கடன் வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது; என்றென்றும் அவர்கள் வட்டிக் கடைக்காரர்களின் கடனாளியாகவே இருக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

தக்காவிக் கடன்கள் மூலமாக அரசாங்கத்திடமிருந்து நேரடியாகக் கிடைக்கும் கடன் தொகையும் மிகச் சொற்பமானதே.

அதற்கு அரசாங்கம் விதிக்கும் $4\frac{1}{5}$ சதவிகித வட்டி விகிதமும் அதீதமானது. இத்தகைய கடன்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் ஆரம்பத்தில் விவசாயிகள் ஏராளமாகச் செலவு செய்யவேண்டியும் இருக்கிறது.

கூட்டுறவு ஸ்தாபனங்களை ஜனநாயக ஸ்தாபனங்களாக மாற்றியமைத்து, அதன் நிதி வசதிகளைப் பெருக்காவிட்டால் அரசாங்கம் கிராமப்புற கடன் பிரச்சினையை திருப்திகரமான முறையில் தீர்க்க முடியாது. கிராமப்புற ஏழை விவசாயிகளின், விவசாயத் தொழிலாளர்களின் பழைய கடன்களை யெல்லாம் தீர்த்து, அவர்களுக்கு நேரடியாகக் கடனுதவி செய்யவில்லையெனில் இக்கடன் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. கூட்டுறவு ஸ்தாபனங்கள் உண்மையான ஜனநாயக ஸ்தாபனங்களாக விளங்குவதற்கு கூட்டுறவு சொசைட்டிகளின் சட்டத்திலுள்ள ஒவ்வாத ஷரத்துக்களையும் திருத்தியமைக்க வேண்டியது அவசியமாகும்.

இங்ஙனம் கூட்டுறவு சொசைட்டிகளின் சட்டத்தில் பல கடுமையான வரம்புகளும், குறைபாடுகளும் இருந்தபோதிலும், கூட்டுறவு ஸ்தாபனங்களிலிருந்தும் இதர கடன் வசதிகளிலிருந்தும் சாதாரண விவசாயிகள் அதிகபட்ச நன்மை பெறுவதற்கு எல்லாக் கிளைகளும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அகில இந்திய விவசாய சங்கம் வேண்டுகோள் விடுக்கிறது. எனவே விவசாய சங்கம் கூட்டுறவு ஸ்தாபனங்களை ஏற்படுத்த வேண்டும்; சாதாரண மக்களை அந்த ஸ்தாபனங்களில் உறுப்பினர்களாகப் பதிவு செய்ய வேண்டும்; நிலப்பிரபுக்கள், வட்டிக் கடைக்காரர்களின் பிடிப்பிலிருந்து அவர்களை விடுவிக்கவேண்டும்.

விலைவாசி (5)

விலைவாசிகளை சமநிலைப் படுத்தப்போவதாக மந்திரிகளும் அரசாங்கத் தலைவர்களும் ஓயாமல் சொல்லி வருகிறார்கள். விவசாயப் பொருள்களின் விலைகள் தூக்கலாக இருப்பது விவசாயிகளுக்கு அனுகூலம் தான் என்றுகூறி மந்திரிகள் ஆதரிக்கிறார்கள். ஆனால் நடப்பதென்ன? முன்போலவே இப்பொழுதும் விவசாயிகளை லாப வெறியார்கள் சூறையாடிக் கொண்டுதானிருக்கிறார்கள் என்று அகில இந்திய விவசாய சங்கத்தின் 18-வது மாநாடு கருதுகிறது. விலை என்ற கத்தரிக்கோல் பிரிட்டிஷார் காலத்தில் விவசாயிகளின் கழுத்தைக் கத்தரித்தது. சுதந்திர இந்தியாவில் அந்தக் கழுத்தறுப்பு வேலை ஒழிவதற்குப் பதிலாக மேலும் தீவிர

மாகவே நடைபெற்று வருகிறது. விவசாயிகளின் வருமானத்தை ஆழமாக வெட்டுகிறது. பெரும்பாலான விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்வதைத் தடுக்கிறது. பெரும்பாலோரை வறுமைப் படுகுழியில் வீழ்த்துகிறது. அவர்களது உற்சாகத்தைக் கெடுத்து, உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற ஆர்வத்தையே நசுக்கி விடுகிறது. இதனால் தேசிய நலன் பாதிக்கப் படுகிறது. இதனால் லாபமடைவது கைவிரல் விட்டு எண்ணிவிடக்கூடிய கொள்ளை லாபக்காரர்களும் வர்த்தகச் சூதாடிகளும்தான். ஜனநாயகச் சீரமைப்பில் தேசம் முன்னேறுவதற்கு விவசாயத்தை விருத்தி செய்ய வேண்டியது அவசர அவசிய மென்று இந்த மகாநாடு கருதுகிறது. விவசாயம் அபிவிருத்தியடைய, விவசாயிகளுக்கு நிலச் சீர்திருத்தம் செய்யவேண்டும்; கடன்கள் கொடுக்கவேண்டும். இதுபோன்ற முக்கியமான பல உதவிகளும் புரியவேண்டும். விவசாயப் பொருள்களின் விலைவாசியும், தொழில் உற்பத்திப் பண்டங்களின் விலைவாசியும் சரிசமமாக இருப்பதற்கு உருப்படியான, பலனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். விவசாயிகளின் நலன்களுக்கும் பொதுமக்களின் நலன்களுக்கும் சாதகமான முறையில் விவசாயப் பொருள்களின் விலைகளை நிர்ணயிக்க வேண்டும்.

முன்னைய மகாநாட்டில் விவசாய சங்கமானது கீழ்க்கண்ட விஷயங்களைத் திருப்பத் திரும்ப எடுத்துரைத்தது:

1. விவசாயிகள் வாங்கக்கூடிய தொழில்உற்பத்திப் பண்டங்களின் விலையானது, விவசாயிகள் விற்கக்கூடிய விவசாயப் பொருள்களின் விலையைவிட பொதுவாக, அதிகமாகவே இருக்கிறது.

2. இந்த ஏற்றத் தாழ்வை மொத்தவிலைப் புள்ளிகள் சரியாகக் காட்டுவதில்லை. விவசாயப் பண்டங்களின் மொத்தவிலை எவ்வளவு என்று குறிப்பிடுகிறார்களோ, அதைக் காட்டிலும் குறைவான விலைக்கே பெரும்பான்மையான விவசாயிகள் தங்கள் தானியங்களை விற்கிறார்கள். அதே சமயத்தில் தொழில் உற்பத்திப் பண்டங்களின் மொத்த விலை எவ்வளவு என்று காட்டப்படுகிறதோ, அந்த விலையைக் காட்டிலும் கூடுதலான விகிதாச்சாரத்தில்தான் அப்பண்டங்களை சில்லரை விலைக்கு விவசாயிகள் வாங்குகிறார்கள்.

3. தொழில்உற்பத்திப் பண்டங்களின் விலைவாசியானது தொடர்ந்து ஏறிக்கொண்டே போகிறது. ஆனால் விவசாயப் பொருள்களின் விலையோ நிரந்தரமற்று, ஒரு வருஷத்தில் அதிகமாகவும் மறு வருஷத்தில் குறைவாகவும் ஊசலாடிக்கொண்டிருக்

கிறது. ஏன், ஒரே வருஷத்தில்கூட, அறுவடைக் காலங்களில் பெரும்பாலான விவசாயிகள் தானியங்களை விற்கவேண்டிய நிர்ப் பந்தம் ஏற்படுகிற சமயத்தில் தானிய விலைகள் விழுந்துவிடுகின் றன. பிறகு பெரும்பாலான விவசாயிகள் தானியங்களை விற்று விட்ட பிறகு தானிய விலை ஏறிவிடுகிறது. குறைந்த விலைக்கு விற்கப்பட்ட தானியமெல்லாம் எங்கே போகிறது? லாபக் கொள்ளை வியாபாரிக்குப் போய்விடுகிறது; ஏகபோகக் கம் பெனிகளுக்கும் போய்விடுகிறது; வர்த்தகச் சூதாடிகளுக்குப் போய்விடுகிறது. இவர்களோடுகூட, நிலப்பிரபுக்களும், பெரும் பண்ணையார்களும், பணக்கார விவசாயிகளும்தான் விலைவாசி உயர்வினால் பணம் திரட்டுகிறார்கள். தானிய விலை எக்கசக்கமாக அதிகரிக்கிற காலத்தில், அதை வாங்கி உண்ணும் மக்கள் கடும் கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். நாட்டின் தொழில்களும், அன்னிய வர்த்தகமும்கூட பாதிக்கப்படுகிறது. ஆனால் அந்த தானிய விலை ஏற்றத்தினால் பெரும்பாலான விவசாயிகள் அதிக ஆதாயமடைகிறார்களா? கிடையாது. அதற்கு மாறாக, தாங்கள் உற்பத்தி செய்த தானியத்தை எந்த விலைக்கு விற்றார்களோ, அந்த விலையைக் காட்டிலும் கூடுதல் விலைக்கே தங்கள் தேவைக் குத் தானியம் வாங்குகிறார்கள்.

4. விலைவாசிகள் வீழ்ச்சியடைகிறபோது, தொழில்உற்பத் திப் பண்டங்களின் விலைகள் எந்த அளவு குறைகிறதோ, அதைக் காட்டிலும் அதிகமாகவே விவசாயப் பண்டங்களின் விலைகள் குறைந்து விடுகின்றன. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், தொழில்உற்பத்திப் பண்டங்களின் விலைகள் பொதுவாகவே குறைவதில்லை. ஆனால் விவசாயப் பண்டங்கள், அதிலும் குறிப் பாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் விவசாய வர்த்த கப் பொருள்களின் விலையானது மிகமிக மோசமான அளவுக்கு விழுந்துவிடுகின்றது.

இவற்றுக்கெல்லாம் என்ன காரணம் என்பதை அகில இந்திய விவசாய சங்கம் திரும்பத் திரும்ப விளக்கியிருக்கிறது; மீண்டும் விளக்குகிறோம். காரணங்கள் என்ன?

1 மார்க்கெட்மீது, குறிப்பாக விவசாயப் பொருள்களின் மார்க்கெட் மீது லாபக்கொள்ளை வியாபாரிகள், ஏகபோகக் கொள்முதல் செய்யும் கம்பெனிகள், வர்த்தகச் சூதாடிகள் ஆகியோரின் பிடி தொடர்ந்து இறுகிக்கொண்டே யிருக் கிறது.

2. ஏகாதிபத்தியச் செல்வாக்குள்ள நாடுகளுக்கு ஏற்றுமதி

செய்வதே சர்க்காரின் கண்ணோட்டமாக இருக்கிறது. இதில் இன்னும் பெரிய அளவு மாறுதல் இல்லை.

3. பெரும்பாலான விவசாயி மக்கள் வறுமையாலும் ஆதர வற்றவர்களாகவும் வாடுகிறார்கள்.

4. நியாயமான குறைந்தபட்ச விலை இது, நியாயமான கூடுதல்பட்ச விலை இது, என்று அரசாங்கம் நிர்ணயிக்குமேயானால் தானிய உற்பத்தி செய்யும் விவசாயிகளும், வாங்கி உபயோகிக்கும் மக்களும் நாடு முழுவதும் கூட்டுறவு ஸ்டோர்களில் சேர்ந்து அந்த விலை நிர்ணயிப்பைக் கண்டிப்பாக அமுல்நடத்த முன்வருவார்களே யானால்—அரசாங்கத்தால் தானிய வர்த்தகம் உருப்படியாகச் செய்யப்படுமேயானால்—சரக்கு இல்லாமலே (கண்ணில் பார்க்காமலேயே) வியாபாரம்செய்யும் சட்டா பேரத்தை சர்க்கார் தடுக்குமேயானால்—வர்த்தகச் சூதாட்டத்தை ஒழிக்குமேயானால்—விவசாய மக்களையும், தானியங்களை வாங்கி உபயோகிக்கும் மக்களையும் பாதுகாக்க முடியும். ஆனால் அரசாங்கமோ விவசாயிகளையும் பொதுமக்களையும் பாதுகாக்க மறுக்கிறது. லாப வெறியர்களையும் வர்த்தகச் சூதாடிகளையும் தாக்க மறுக்கிறது. ஈவிரக்கமற்ற லாபவேட்டை நடத்த சர்க்கார் அனுமதிக்கிறது என்பது மட்டுமல்ல, பெரும்பாலான விவசாயிகளும் பொதுமக்களும் மேலும் மேலும் உறிஞ்சப்படும் வகையில் விலைவாசிகளை ஏற்றிக்கொண்டே போவதற்கு ஊக்கமளிக்கும் கொள்கைகளை சர்க்கார் வகுத்துள்ளது.

கடந்த ஓராண்டாக இந்தப் போக்கு தடுத்து நிறுத்தப் படவில்லை; அதற்கு மாறாக வளர்ந்துகொண்டே போகிறது.

1. சமீபத்தில் இந்திய சர்க்கார் உபயோகப் பொருள்களின் மீது வரி விதித்ததால் ஏராளமான தொழில் உற்பத்திப் பண்டங்களின் விலைவாசிகள் ஏறிவிட்டன.

2. ஆனால் அதே சமயத்தில் உணவு தானியங்களின் விலையோ சென்ற வருஷத்தைக் காட்டிலும் தாழ்ந்துவிட்டது. உதாரணமாக ஒரிஸாவில் ஒரு மணங்கு நெல் 8 அல்லது 9 ரூபாய்க்கு இறங்கிவிட்டது. இந்த தானிய விலை வீழ்ச்சியின் ஆதாயத்தை சாதாரண பொதுமக்கள் அனுபவிக்க முடியுமா என்பது மிகவும் சந்தேகம்தான். ஆனாலும் தானியவிலை பாதாளத்தில் விழுவதைத் தடுத்துநிறுத்த சர்க்கார் முன்வரவில்லை.

3. விவசாய வர்த்தகப் பொருள்களான மிளகு, இஞ்சி, தேங்காய், வேர்க்கடலை, மரவள்ளிக்கிழங்கு, வெல்லம் முதலியவைகளின் விலை மிகவும் சரிந்துவிட்டது.

4. சர்க்கார் விலைகளை நிர்ணயிக்கிறபோதுகூட, விவசாயிகளும் பொதுமக்களும் கஷ்டப்படத்தான் செய்கிறார்கள். உதாரணமாக, கரும்பு விலை குறைவாக இருக்கிறது. ஆனால் சர்க்கரை விலையோ அதிகரிக்கப்பட்டிருக்கிறது. பருத்திக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இந்த நிர்ணய விலையைக் காட்டிலும் ஒரு பேலுக்கு 200 ரூபாய் குறைந்தே வாங்குகிறார்கள். ஏனென்றால் அரசாங்கம் அமெரிக்கப் பருத்தியை நிர்ணய விலையில் தருகிறது. மறுபடியும் இது விவசாய உற்பத்தியாளர்களை வஞ்சிப்பதாகத்தானிருக்கிறது. இதனால் வாங்கும் பொதுமக்களுக்கு நன்மையொன்றுமில்லை. இதற்குக் காரணம், தொழில்உற்பத்தி பண்ட முதலாளிகளும், பெரும் வியாபாரிகளும் செய்யும் தில்லுமுல்லுகள்தான்.

5. கடந்த பல ஆண்டுகளாகவே சணலுக்கு விவசாயிகளுக்கு மிகவும் குறைந்த விலைதான் கிடைக்கிறது. சணலுக்கு நியாயமான குறைந்தபட்ச விலை நிர்ணயிக்க சர்க்கார் மறுத்துவிட்டது. ஆனால் இந்த வருடம் உற்பத்தி குறைந்திருந்ததைப் பயன்படுத்தி, அதிக விலைகொடுத்து பதனிடாத சணலையெல்லாம் சேகரித்துக் கொண்டு ஏகபோக சணல் வியாபாரிகள் வெற்றி பெற்றார்கள். பதனிடாத பச்சை சணலின் நியாயமான குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்க இன்றும்கூட சணல்மில் முதலாளிகள்விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச மறுக்கிறார்கள். சர்க்காரும் மறுத்துவிடுவதால். சணல் விவசாயிகள் ஆதரவற்றவர்களாக, நிரந்தரமற்ற நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் இந்த மகாநாடு விவசாயிகளின் நன்மைக்காகவும், பொதுமக்களின் நன்மைக்காகவும், ஏன் தொழிலின் நன்மைக்காகவும், அயல் நாட்டு வர்த்தகத்தின் நன்மைக்காகவும்கூட, வற்புறுத்திக் கூறுவது என்னவென்றால் சரியான சமத்துவமான முறையில் விலைவாசிகளை நிர்ணயிக்க வேண்டும் அதற்காக:

(அ) சாதாரண மக்கள் உபயோகிக்கக் கூடிய பொருள்கள் மீது சர்க்கார் வரிகளை அதிகரிக்கக் கூடாது. இதர வழிகளில் வருமானத்துக்கு வழிதேட வேண்டும்.

(ஆ) கொள்ளை லாபத்தையும், வர்த்தகச் சூதாட்டத்தையும் எதிர்த்துக் கடுமையாகப் போராடவேண்டும். நியாயவிலை நிர்ணயிக்கப்பட வேண்டும். விவசாய மக்களும் பொதுமக்களும் ஒத்துழைப்புடன் நடத்தக்கூடிய கூட்டுறவு ஸ்டோர்கள் மூலமாகவும், அரசாங்கமே தானியக் கொள்முதல் செய்வதின் மூலமாகவும்,

சேமிப்புக் கிடங்குகள் ஏற்படுத்துவதின் மூலமாகவும் நியாய விலையை உத்தரவாதம் செய்யமுடியும்.

(இ) நமது விவசாய வர்த்தகப் பொருள்களுக்கு நியாய மான விலை கிடைக்க, நமது ஏற்றுமதி வர்த்தகத்தை சோஷலிஸ்ட் நாடுகளுடனும், புதிதாக விடுதலையடைந்த நாடுகளுடனும் இணைக்கக்கூடிய வகையில் தீவிர மாறுதல் செய்யவேண்டும்.

தேச பக்தியும் ஜனநாயக உணர்வும் கொண்ட பொதுமக்கள், நாட்டின் நிலைமை படுமோசமாகிக் கொண்டிருப்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமென இந்த மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது. தானியங்களை வாங்கும் பொதுமக்கள், தானியங்களின் விலை வாசிகள் மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டே போவதால், அதற்காக அதிகம் செலவழிக்க வேண்டியிருப்பதையும்—அதே சமயத்தில் அந்தத் தானிய விலைஏற்றத்தின் ஆதாயமானது பெரும்பாலான விவசாயிகளுக்குக் கிடைக்காமலிருப்பதையும்—அதுமட்டுமின்றி, அந்த விவசாயிகளுக்கு ஏற்பட்ட உற்பத்திச் செலவை சரிக்கட்டுவதற்குக்கூட முடியவில்லை என்பதையும் அறிதல் வேண்டும். இந்த நிலைமையை இனிமேலும் நீடிக்கவிடக் கூடாது. ஏனென்றால் இது தொடர்ந்து நீடித்தால் விவசாய மக்களின் துன்ப துயரங்கள் பயங்கரமாகிவிடும்; அதனால் உணவு உற்பத்தி பெருகுவதற்கே பெரும் இடையூறுகிவிடும். சாதாரண மக்கள் வாங்கி உபயோகிக்கும் பண்டங்கள்மீது சர்க்கார் வரிகளை அதிகரித்துக்கொண்டிருப்பதிலிருந்தே. விலைவாசிகளை ஸ்திரப் படுத்த சர்க்காருக்கு விருப்பமில்லையென்று தெரிகிறது. மார்க்கெட்டிங் சொஸைட்டிகளை ஊக்கப்படுத்தவும், அவற்றை ஜனநாயகப்படுத்தவும் சர்க்கார் முன்வரவில்லை. இதர அத்தியாவசியப் பண்டங்கள் விஷயத்தில் அரசாங்க வர்த்தகம் நடத்தாவிட்டாலும், "தானிய விஷயத்திலாவது அரசாங்க வர்த்தகம் நடத்துவது" என்ற அரசாங்கக் கொள்கையைக்கூட அரசாங்கம் கைகழுவிவிட்டது. ராஜ்ய சர்க்கார்கள் அரசாங்க வர்த்தகம் செய்யவேண்டியதில்லையென்று மத்திய உணவு அமைச்சரே ஆலோசனை சொல்லிவிட்டார்.

திருச்சூரில் கூடிய இந்த மாநாடு சகல விவசாயிகளையும் அறைகூவி அழைக்கிறது, அவர்கள் உணவு தானியம் உற்பத்தி செய்பவர்களாயிருந்தாலும் சரி. வர்த்தகப் பயிர்கள் சாகுபடி செய்பவர்களாயிருந்தாலும் சரி, அவர்கள் எந்த அரசியல் கருத்துள்ளவர்களாயிருந்தாலும் சரி—அவர்கள் ஏழைகளாயினும் சரி, நடுத்தர வர்க்கமாயினும் சரி, பணக்கார விவசாயிகளாயினும் சரி அனைவரும் ஒன்றுசேர்ந்து உங்கள் விவசாய உற்பத்திப் பொருள்

களுக்கு நியாயமான ஸ்திரமான விலை நிர்ணயம் வேண்டுமென்று கோரி தேசம் பரவிய வல்லமைமிக்க கிளர்ச்சியைச் செய்யுங்கள்! நகர்ப்புறங்களிலுள்ள தேசபக்தியும் ஜனநாயக புத்தியுமுள்ள பொது மக்களின் ஆதரவைப்பெற பெரும் இயக்கம் நடத்துங்கள்.

அகில இந்திய விவசாயிகள் சங்கமானது, நியாய விலைக்காகப் போராடும்; அரசாங்க வர்த்தகத்துக்காகப் போராடும்; மார்க்கெட்டிங் சொஸைட்டிகளுக்கு ஊக்கமூட்ட வேண்டுமென்றும், அவற்றை ஜனநாயகப்படுத்த வேண்டுமென்றும் போராடும்; அதே சமயத்தில் இன்றுள்ள கூட்டுறவு சொஸைட்டிகளை விவசாயிகளுக்கும் பொதுவாகப் பொதுமக்களுக்கும் நன்மையளிக்கும் விதத்தில் முழுக்க முழுக்கப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கவும் செய்யும்.

மத்திய கிசான் கவுன்சில்

18-வது மகாநாட்டில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்:

தலைவர்: **ஏ. கே. கோபாலன், எம்.பி.**

உப தலைவர்கள்: **பங்கிம் முக்கர்ஜி, மணலி சி. கந்தசாமி.**

பொதுக் காரியதரிசி: **ஜகஜித்சிங் லயால்புரி.**

கூட்டுக் காரியதரிசி: **எஸ். வி. பருலேக்கர், எம்.பி.**

பொருளாளர்: **எம். ஏ. ரசூல்.**

அங்கத்தினர்கள்

ஓய். வி. கிருஷ்ணுராவ், என். பிரசாத ராவ், அச்சின்த்ய பட்டாச்சார்யா, காரியானந்த சர்மா, போகிந்திர ஜா, தாகூர்பாய் ஷா, பி. ஆர். மாதவன் பிள்ளை. இ. கோபாலகிருஷ்ண மேனன், சி. எச். கணரன், கே. ஏ. கேரளீயன், பி. வி. காக்கிலயா, குருதயாள் சிங், திருமதி கோதாவரி பருலேகர், தாலிப் சிங் தாப்பியாலா, குருபக்ஸ் சிங் அட்டா. தாலிப் சிங் ஜோஹால், பி. சீனிவாச ராவ், ஏ. கே. சுப்பையா, நிப்பன் சக்கரவர்த்தி, பி. கே. தாண்டன், டாக்டர். இஜட். ஏ. அகமது எம்.பி., ராம்சந்திர மிஸ்ரா, பவானி சென், பிஸ்வநாத் முக்கர்ஜி, எச். கே. கோனர்

சிதம்பரம் மாகாண விவசாயிகள் சங்க மகாநாட்டு தீர்மானங்கள்

—★—

நிலச் சீர்திருத்தம்பற்றி

1960 ஏப்ரல் 4-ந் தேதி சட்டசபையில் பிரேரேபிக்கப்பட்ட நில உடைமைக்கு உச்சவரம்பு கட்டும் மசோதா கிட்டத்தட்ட ஒரு வருஷமாகியும் இன்னும் சட்டமாக்கப்படாமல் பொறுக்குக் கமிட்டி விவாத நிலையில் இருக்கிறது. இந்த சட்ட சபை கலைக்கப்படுவதற்கு முன்பு இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் அமுலுக்குக் கொண்டுவரப்போவதில்லை என்று நம்பகமாகத் தெரிகிறது.

இந்த மசோதாவைப்பற்றி சென்ற வருஷத்திய மகாநாட்டில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் 17 திருத்தங்களை நிறைவேற்றி அந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொண்டு மசோதாவை சட்டமாக்கினால்தான், நிலச் சீர்திருத்தம் என்றவகையில் இன்றைய நாட்டு நிலைமைகளுக்கேற்ப பொருந்தும் என்று வலியுறுத்த தீர்மானித்துள்ளோம்

இந்த 17 திருத்தங்களையும், தமிழ் நாட்டில் சகல பகுதியிலும் ஈடுபடும் விவசாயிகளும் அங்கீகரித்துள்ளனர் என்பதை நாங்கள் முதலமைச்சரிடம் சமர்ப்பித்த 2¼ லட்சம் கையெழுத்துக்கள் அடங்கிய மகஜர்களே எடுத்துக் காட்டுவதாகும். மேலும் விவசாய இயக்க ஊழியர்கள் தமிழகம் பூராவும் பல்லாயிரக்கணக்கான மைல்கள் பாதயாத்திரை செய்தும், பல மகாநாடுகள், பொதுக் கூட்டங்கள் நடத்தியும் இந்தத் திருத்தங்களைப் பிரசாரம் செய்துள்ளனர். பல லட்சக்கணக்கான மக்களும் இதை ஏகமனதாக அங்கீகரித்துள்ளனர். பொறுக்குக் கமிட்டி விஜயம் செய்த ஒவ்வொரு நகரிலும் பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் திரண்டு இத்திருத்தங்களை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். பொறுக்குக் கமிட்டியின் முன்பு சாட்சியம் அளிக்கச் செய்தனர். பொறுக்குக் கமிட்டியில் முன்பு சாட்சியம் அளித்த எங்கள் ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒவ்வொரு ஜில்லாப் பிரதிநிதிகளும், எங்களது தலைவர், பொதுக் காரியதரிசியும் திருத்தங்களை ஆணித்

தரமாக ஆதாரங்களுடன் விளக்கி அவற்றின் அவசியத்தை வலி யுறுத்தியுள்ளனர்.

இவ்வளவுக்குப் பின்பும் ராஜ்ய சர்க்காரின் போக்கு திருத்தங்களை ஏற்றுக்கொள்ளும் வகையில் திரும்பவேண்டுமென்று இம்மகாநாடு எதிர்பார்க்கிறது. சீக்கிரம் பொறுக்குக் கமிட்டியின் யாதாஸ்தை சட்டசபையில் சமர்ப்பித்து, சட்டமாக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

இந்த 17 திருத்தங்களும் இன்றியமையாதவை; இதில் (1) சட்டத்தை பின்நோக்கி 1955 லிருந்து அமல் நடத்துவது (2) குடும்பமொன்றுக்கு இருபோக நஞ்சை 15 ஏக்கர் வீதம் வரம்பு கட்டுவது; (3) விதிவிலக்குகளை ரத்து செய்வது; (4) குத்தகை வாரக் குடியானவன் நிலத்தை அவனுக்கே வரம்புக்குட்பட்டு சொந்தமாக்கி பல தவணைகளில் நியாயவாரத்தை நஷ்ட ஈடாகப் பெறுவது, என்ற நான்கு திருத்தங்களையும் அடிப்படையானதாகவும், மசோதாவை உண்மை நிலச்சீர்திருத்தமாக மாற்றும் தன்மை கொண்டதாகவும் இம்மகாநாடு கருதுகிறது.

உச்சவரம்பு மசோதா சட்டமாக நிறைவேற்றப்படுவதில் உள்ளடங்கியுள்ள இந்த பிரச்சினைகளை தமிழ்நாடு விவசாய சங்கத்தின் இம் மகாநாடு தமிழக விவசாயிகளுக்குசுட்டிக் காட்டி அவர்களை விழிப்புணர்ச்சியுடன் இருக்கும்படி இம் மகாநாடு அறைகூவல் விடுகிறது, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் கிளைகள் இந்தச் செய்தியை சகல கிராமங்களிலும் பரப்பி இப்பெரியதொரு கிளர்ச்சியை நீடிக்கவேண்டுமென்றும், இவ்வளவுக்குப் பின்னும் சர்க்கார் நிலச் சீர்திருத்தத்திற்கு ஜீவநாடி போன்ற நமது திருத்தங்களை நிராகரிக்குமேயானால் சர்க்காரின் போக்கை மாற்றும் அளவுக்கு சட்டபூர்வமான வெகுஜனப் போராட்டத்தை நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை. என்பதை இம்மகாநாடு மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் பிரகடனம் செய்ய விரும்புகிறது.

மேலே சொல்லப்பட்டிருக்கும் நிலையில், குறிப்பிட்ட காலத்தில் சர்க்காரின் போக்கை மாற்றுவதற்காக தேவையான வெகுஜனப் போராட்ட நடவடிக்கைகளை நிர்ணயித்து செயல்படுத்த நிர்வாகக் கமிட்டிக்கு அதிகாரம் அளிப்பதுடன் தமிழக விவசாயிகள் தங்களது இந்த ஜீவமரணப் போராட்டத்தில் தமிழ்நாடு விவசாய சங்கத்தின் சார்பில் அவசியப்பட்டால் எடுக்கப்படும் போராட்ட நடவடிக்கைகளுக்கு தயாராக இருக்கும்படி இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

இனம் பிரச்சினைகள்

நீண்ட நாட்களாக தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வரும் இனம் விவசாயிகள் பிரச்சினைக்கு தீர்வு காணும் முறையில் தகுந்த சட்டதிட்டங்கள் கொண்டுவர மறுத்துவரும் மாகாண சர்க்காரின் போக்கை தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் 12-வது மகாநாடு கடுமையாக விமர்சனம் செய்கிறது.

இரண்டு அர்த்தம் தரும் வகையில் அமைக்கப்பட்ட ஷரத்துகளும், அதை வியாக்யானப்படுத்தும் ஹைகோர்ட்டின் சில நீதிபதிகளின், நிலப்பிரபுக்களுக்கு ஆதரவான சில தீர்ப்புகளும் மேலும் இப்பிரச்சினையை சிக்கலாக்கி பல லட்சக் கணக்கான இனம் விவசாயிகளின் நில உரிமை பறிக்கப்பட்டு அவர்களை சாதாரண கூலிக்காரர்களாக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. மேலும் ஆயிரக்கணக்கான கிராமங்கள் ரயத்துவாரியாக மாற்றப்படாமல் பழைய நிலப்பிரபுத்துவ முறை நீடிப்பதிலும், அதனால் உணவு உற்பத்தி போன்ற தேசீய அபிவிருத்திகளும் பாதிக்கப்படுகிறது என்பதை சர்க்காரின் கவனத்திற்கு இம்மகாநாடு கொண்டு வருகிறது.

எனவே நில உடைமை மசோதாவை சட்டமாக்குமுன் ஒன்றுபட்ட நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு ஏதுவாகப் புதுக்கோட்டையில் நடந்த தமிழ்நாடு விவசாயிகள் மகாநாடு நிறைவேற்றியுள்ள கீழ்க்கண்ட ஆலோசனைகளை சட்டத் திருத்தங்களாக நிறைவேற்ற வேண்டுமென்று சர்க்காரை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது :—

1. ஒழிப்பில் கொண்டுவரப்பட்டு செட்டில்மெண்ட் நடவடிக்கைகள் பூர்த்தியாகாமல் இருக்கும் ஜமீன் இனம் கிராமங்களில் பட்டா வழங்கும் நடவடிக்கைகளில் விவசாயிகளுக்கு சரியான அறிவிப்புக் கொடுக்கப்படாமல் தீர்ப்பாகியுள்ள கேஸ்களில் மீண்டும் விவசாயிகளுக்கு அறிவிப்புக் கொடுத்து மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

2. எல்லா இனம் கிராமங்களையும் ஒழிப்பில் கொண்டுவந்து ரயத்துவாரியாக மாற்றும் வகையில், ஊழிய மான்ய இனம்கள் தவிர 1936ம் வருஷ இனம், பகுதி இனம், மைனர் இனம் ஆகிய எல்லா இனம்களையும் இனம் எஸ்டேட்டுகளாகப் பிரகடனப்படுத்தும் முறையில் 1908-ம் வருஷ எஸ்டேட் நிலச்சட்டத்தின் பிரிவு 3, உட்பிரிவு 2 (டி) யில் திருத்தம் செய்து ஒழிப்பில் கொண்டுவரப்பட வேண்டும்.

3. இனும்தார்கள் பண்ணை நிலம் சம்பந்தமாக 1908-ம் வருட எஸ்டேட் நிலச் சட்டத்தின் பிரிவு 185 ஏ, 185 பி. யில் கண்டுள்ள வரையறுப்புகளுக்கு மாறுபட்ட முறையில் பின்னால் வந்துள்ள சட்ட ஷரத்துகளையும் ஹைகோர்ட் தீர்ப்புகளையும் ரத்து செய்து விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கச் செய்யவேண்டும்.

திருச்சி ஜில்லா புதுக்கோட்டைப் பிரதேசம் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்ட பிறகும்கூட சென்னை ராஜ்ய எஸ்டேட் நிலச் சட்டங்கள் அமுல் நடத்தப்படாமல் இருப்பதை இம்மகாநாடு கண்டிப்பதோடு உடனடியாக சென்னை ராஜ்ய எஸடேட் நிலச் சட்டப்படி புதுக்கோட்டைப் பிரதேசங்களையும் நடவடிக்கை எடுத்து அங்குள்ள லட்சக் கணக்கான இனும் விவசாயிகளுக்கு நில உரிமையை அங்கீகரிக்க வேண்டுமாய் சர்க்காரை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

மேற்கண்ட தீர்மானத்தின் அடிப்படையில் விரிவான கிளர்ச்சியைத் துவக்குவதோடு புதுக்கோட்டை இனும் மகாநாட்டுத் தீர்மானத்தில் கண்டுள்ள ஆலோசனைகளை சட்டத் திருத்தங்களாகக் கொண்டுவர வேண்டுமெனக் கோரும் மகஜர்களில் விரிவான கையெழுத்து இயக்கம் நடத்தவேண்டுமாய், இனும் கிராம விவசாயிகளையும், விவசாய சங்கங்களையும் இம்மகாநாடு அறைகூவி அழைக்கிறது.

கடலூரில் கூடிய தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிர்வாகக் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானங்கள்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் மே மாதம் 19, 20 தேதிகளில் நடந்தது. நிலச்சீர்திருத்த மசோதா பற்றி அக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானத்தின் முழுவிபரம் வருமாறு :—

சென்னை சட்டசபையில் நிலச்சீர்திருத்த மசோதா கொண்டு வரப்பட்டு ஓர் ஆண்டிற்கு மேலாகிறது. இன்னும் அம்மசோதா பொறுக்குக் கமிட்டியாய் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பொறுக்குக் கமிட்டியானது ஒரு வாரம் அம்மசோதாவைப் பரிசீலனை செய்ததென்றும் பல முக்கிய மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளனவென்றும் சட்டசபையின் அடுத்த கூட்டத்தில் மசோதா நிறைவேற்றப் படுமென்றும் அமைச்சர் திரு. பக்தவத்சலம் சமீபத்தில் ஓர் அறிக்கை வெளியிட்டார். ஆனால் அமைச்சர், திருத்தங்களின் தன்மையைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

நிலப்பிரபுக்களுக்கே சாதகமானவை

மசோதாவில் பொறுக்குக் கமிட்டி செய்துள்ள திருத்தம் அனைத்தும் நிலப் பிரபுக்களுக்கே சாதகமாக அமைந்துள்ளதாக நிலப் பிரபுக்களுடன் நெருங்கிய தொடர்புள்ள வட்டாரங்களிடை பேசப்படுகிறது. நிலப்பிரபுக்கள் குதூகலம் கொள்வதிலிருந்து திருத்தங்களின் தன்மையை யூகித்து அறியக்கூடும். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் நிர்வாகசபை ஆழ்ந்த கவலை கொள்ளுகிறது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிவித்த 17 திருத்தங்களை நிலச்சீர்திருத்த மசோதாவில் சேர்த்தால் மட்டுமே, அம் மசோதா உண்மையான நிலச்சீர்திருத்தத்திற்கு வழிசெய்யுமாறு இக்கூட்டம் கருதுகிறது; மசோதாவிலுள்ள குறைகளை நீக்க, அடியிற்கண்ட நான்கு அம்சங்கள் அவசியம் :

1. இம் மசோதா, 1955-ஆண்டிலிருந்து அமுலுக்கு வர வேண்டும்.

2. குடும்பத்திற்கு 15-ஏக்கர் முதல்தர நிலமே உச்சவரம்பு ஆக்கப்படவேண்டும்.

3. எந்த சால்ஜாப்பு பேரிலும் நில உடைமைக்கு விதி விலக்கு இருக்கக்கூடாது.

4. குடிவார சாகுபடி நிலங்கள் உழவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கப்படவேண்டும். ஆனால் அவர்கள் 12-ஆண்டு தவணைகளில் ஈடு தொகையைச் செலுத்திவிடவேண்டும்.

மேலே குறிப்பிட்ட நான்கு திருத்தங்கள் இல்லாவிட்டால், நிலச்சீர்திருத்த மசோதாவானது மற்ெறாரு உருவத்தில் நிலப்பிரபுத்துவத்தை நிலைபெறச் செய்யும்; கிராமங்களில் வறுமையில் வாடும் விவசாய மக்களின் நிலை மேலும் அவலமாகிப் போய் விடும்.

போராடுவோம்

இந்த நான்கு திருத்தங்களுக்கு முரணாக அரசாங்கம் செய்யும் திருத்தங்கள் விவசாயிகளால் பலமாக எதிர்க்கப்படுமென்று நிர்வாகசபை அரசாங்கத்திற்கு எச்சரிக்கிறது. நிலச்சீர்திருத்தம் என்ற பெயரில் நிலப்பிரபுத்துவத்தின் நலன்களைப் பாதுகாக்க ஒரு மசோதா கொண்டுவரப்பட்டு சமுதாயத்தில் 90 சத வீதமாக உள்ள விவசாயிகள்மீது திணிக்கப்படுமானால், சட்டசபையில் மிருகபல பெரும்பான்மைபேரில் நிறைவேற்றப்படுமானால், விவசாய மக்கள் வாளாயிருக்கமாட்டார்கள்.

17 திருத்தங்களை ஆதரித்து ராஜ்யம் முழுவதிலும் பிரச்சாரம் நடத்தும்படி இக்கூட்டம் விவசாயிகள் சங்கங்களை அழைக்கிறது. 17 திருத்தங்களின் கருத்தும் விளக்கமும் ஒவ்வொரு கிராமத்தையும் ஒவ்வொரு வீட்டையும் எட்டவேண்டும். எல்லா மட்டத்திலுமுள்ள விவசாய சங்கங்கள் உடனே திட்டமிட்டு இயக்கம் நடத்தவேண்டும். ராஜ்யம் முழுவதிலும் அனுசரிப்பதற்காக ஒரு தினம் விரைவில் நிர்வாக சபையால் நிர்ணயிக்கப்படும். அத்தினத்தில் மக்களால் அணிவகுப்புகள், கூட்டங்கள் நடத்தப்பட்டு ஸ்தல எம்.எல்.ஏ. களுக்கும் அதிகாரிகளுக்கும் மகஜர்கள் கொடுக்கப்பட வேண்டும், இயற்கை வளங்களையும் மக்கள் சக்தியையும் பயன்படுத்தி புதிய தமிழகத்தைக் சிருஷ்டிக்கும் நிரந்தர பிரச்சினையே இந்த நிலச்சீர்திருத்தப் பிரச்சினையாகும். இது கட்சிகளுக்கும் ஜாதிகளுக்கும் மதங்களுக்கும் அப்பாற்பட்ட பிரச்சினை. இது ஒரு தேசிய பிரச்சினை; எனவே,

எல்லா தேசபக்தர்களும் ஜனநாயக சக்திகளும் திரண்டு வந்து ஒரு உண்மையான நிலச்சீர்திருத்தத்திற்காகப் போராட வேண்டும். நேர்மையுள்ள காங்கிரஸ்வாதிகளும் இந்த இயக்கத்தில் பங்கு எடுத்துக் கொள்வரென்று இச்சபை நம்புகிறது.

விவசாயிகளைப் புறக்கணிக்க வேண்டாம்

விவசாயிகளின் ஏகப்பிரதிநிதியான 'தமிழ் நாடு விவசாயிகள் சங்கம்' சமர்ப்பித்துள்ள 17 திருத்தங்களை ஆழ்ந்து ஆலோசனை செய்து ஏற்றுக்கொள்ளுமாறு சர்க்காருக்கு இந்த நிர்வாக சபை நினைவுறுத்துகிறது. பெரும்பாலான விவசாயிகளின் விருப்பத்தைப் புறக்கணித்து சட்டசபை மெஜாரிட்டியின் அடிப்படையில் நிலப்பிரப்புத்துவத்தைப் பாதுகாக்கும் ஒரு மசோதாவை திணிக்க வேண்டாமென்று இச்சபை சர்க்காரை எச்சரிக்கிறது.



ஜனசக்தி பிரஸ், சென்னை-1